தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1981 ஏப்ரல் 4.

பங்குனி 22, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின்.''

ஒருவனுடைய உள்ளத்தைக் குறிப்பால் அறிந்து அவனுக் குற்றதை உணரக் கூறியவரைப் பெற்றால், அவன், அவர் முகம் நோக்கி நிற்றல் ஒன்றே போதும். வாயினாலோ, செய்கையி னாலோ வேறு எத்தகைய குறிப்பினாலோ அவருக்குத் தன் நிலையை அவன் தெரிவிக்க வேண்டியதே இல்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மென்னந்தி-நாகாச்சி கூட்டுறவு பால் வழங்கும் சங்கம்.

*வினா எண். 632—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பரமக்குடி தாலுக்கா, மென்னந்தி-நாகாச்சி கூட்டுறவு பால் சங்கத்தின் மெம்பர்களுக்கு கறவை மாடுகள் வாங்க கடன் கேட்டும் கிடைக்காததால் சங்கம் 6, 7 ஆண்டுகளாக செயல் படாமல் இருந்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள நட வடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மற்றும் (ஆ) சங்க நிர்வாகக் குழு கடந்த 7 ஆண்டுகளாக சங்க உறுப்பினர் களுக்கு கறவை மாடுகள் வாங்க கடன் பெற எவ்வித நடவடிக்கை யும் மேற்கொள்ளவில்லை. தற்பொழுதுள்ள சங்க நிர்வாகக் குழுவை புதுப்பித்து அவர்கள் பரிந்துரையின் மூலம் அங்கத்தினர் களுக்கு கடன் கிடைக்க ஏற்பாடு செய்ய விருதுநகர் துணைப் ப்திவாளர் (பால் பதம்) அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

[1981 ஏப்ரல் 4

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, கடந்த 6, 7 ஆண்டுகாலமாக இந்தச் சங்கம் செயல்படவில்லை என்பதை அமைச்சரவர்களே ஒத்துக்கொண்டார்கள். என்ன காரணத்தால் அது செயல்படவில்லை? ஆண்டு முடிகின்ற நேரத்திலே அந்தச் செயல் நடந்திருக்கின்றது. இதற்கு அரசியல் உள் நோக்கம் உண்டா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். மீண்டும் அந்தச் சங்கம் செயல்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அதனுடைய நிர்வாகத்தைப் புதுப்பித்து புதிய நிர்வாகக் குழுவினுடைய வாயிலாக அந்தச் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்க கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் வாயிலாகவும் கடன் பெறுவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அத்தி பூத்தது போன்று 28–2–81 அன்று அந்தச் சங்கத்திற்குத் தேர்தல் நடந்து நிர்வாகஸ்தர்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனர். ஏனென்றால் சமீப காலத்திலே கூட்டுறவு அமைப்புகளுக்கே தேர்தல் நடத்தப்படாத நிலைமையில் இந்தச் சங்கத்திற்கு தேர்தல் நடத்தப்பட்டது குறித்து நான் வரவேற்கிறேன். மேலும் கடந்த 6, 7 ஆண்டு காலமாக அந்தச் சங்கத்திற்கு எந்தவிதமான பாக்கியும் கிடையாது. சென்ட்ரல் வங்கியிலேயும் பாக்கி கிடையாது, வேறு எந்த வங்கியிலேயும் பாக்கி கிடையாது. மேலும் அந்தச் சங்கத்திற்கு 800 ரூபாய் ஷேர் கேப்பிட்டல் இருக்கின்றது. இந்த நிர்வாக சொசைட்டியை வேண்டுமென்றே தடுத்திருக்கின்றார்கள். ஆகவே மீண்டும் நேரடியாக இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு கறவை மாடுகள் வாங்கிக் கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, ஏற்கெனவே நான் சொன்னபடி அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகின்றது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற கறவை மாடுகள் வாங்குவதற்கு கடன் கொடுக்கின்றபோது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் சரியான முறையைக் கடைப்பிடிப்பது இல்லை. ஆகவே கடன் கிடைக்காதவர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபற்றிய விவரங்களைக் கொடுத்தால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

1981 ஏப்ரல் 4]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, ஏற்கெனவே அரிசன கூட்டுறவு பால் சங்கங்களுக்கு போதுமான கடன்கள் கூட்டுறவு வங்கிகளிலே இருந்து கொடுக்கப்படுவது கிடையாது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்துதான் கடன் தரப்பட வேண்டிய நிலைமை இருக்கின்றது. அந்த வங்கிகள் ஆதி திராவிட மக்களுக்குக் கடன் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். அதை நிவர்த்திக்க அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்யுமா? அல்லது அவ்வாறு கொடுக்கப்படுகின்ற கடனுக்கு அரசாங்கம் கேரண்டி கொடுத்தால் அந்த வங்கிகள் கடன் கொடுப்பதற்குரிய வாய்ப்பு இருக்கும். மேலும் ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் தனித் தனியாக கூட்டுறவு பால் சங்கத்தை ஆரம்பிக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி பரமக்குடி தாலுக்கா மென்னந்தி-நாகாச்சி கூட்டுறவு பால் சங்கம் செயல்படாமல் இருப்பது குறித்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வேறு விவரங்கள் தேவை என்றால், தனிக் கேள்வி போட்டால் பதில் சேகரித்துக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு பால் சொசைட்டிகளின் மூலம் லோன் கிடைப்பதில்லை. அதற்கு ஏதாவது மாற்று ஏற்பாடு அரசு செய்யுமா என்று நான் பொதுவாகத்தானே கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்பது கொள்கையைப் பொருத்தது. அதனால் தனிக் கேள்வியே போட வேண்டும்.

Quality control methods in Tamil Nadu Dairy Development Corporation.

*Q. No. 633— Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(a) Whether quality control methods are adopted by Tamil Nadu Dairy Development Corporation; and

(b) If so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) பால் கூட்டுறவுச் சங்கங்களில் பாலை வாங்கும்போது பரிசோதனை செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது. பால் குளிரூட்டும் நிலையத்தில் பாலைப் பெறும்பொழுது ஒவ்வொரு பாத்திரத்திலுள்ள பாலின் மாதிரிகள் எடுக்கப்பட்டு அதில்